செ.வெ.எண்: 52 நாள்: 24.01.2018

# பத்திரிக்கை செய்தி

## பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்

## 28.01.2018 ஞாயிற்றுக்கிழமை
## புதுக்கோட்டை மாவட்டம்

வருகின்ற **28.01.2018** ஞாயிற்றுக் கிழமையன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற உள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அனைத்து அரசு மருத்துவ மனைகள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள், பேருந்து நிலையங்கள், இரயில்வே நிலையங்கள் போன்ற 1362 மையங்களில் ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் ஏற்கனவே எத்தனைமுறை சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் மீண்டும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

இம்முகாமிற்கு தேவையான 2 லட்சம் தவணைகள் போலியோ சொட்டு மருந்து 67 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகராட்சிகளுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளது இம் முகாமினை சிறப்புற நடத்திட சுகாதாரம், மருத்துவம், வருவாய், சத்துணவு, கல்வி, ரோட்டரி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பல்வேறு அரசு மற்றும் அரசு சாரா துறைகளைச் சேர்ந்த 5443 - க்கும் மேற்பட்ட பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மேலும் பல்வேறு அரசு துறைகளைச் சார்ந்த 100-க்கும் மேற்பட்ட வாகனங்கள் அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து சொட்டு மருந்து மையங்களுக்கு போலியோ சொட்டு மருந்துகளை குறிப்பிட்ட குளிர்பதன நிலையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

ஒவ்வொரு சொட்டு மருந்து மையத்திலும் இப்பணியில் ஈடுபட இருக்கும் நான்கு பணியாளர்களும் இம் மையத்திற்கு வரும் அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்குவார்கள். அடுத்தடுத்த நாட்களில் இவர்கள் இரு குழுக்களாக பிரிந்து வீடு வீடாகச் சென்று விடுபட்ட குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்குவார்கள். புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையருடன் ரோட்டரி சங்கத்தினர் இணைந்து இம் முகாமினை திறம்பட செயல்பட அறிவுரை வழங்கப்பட்டது.

**<u>முக்கிய அம்சங்கள்:</u>**

1. சொட்டு மருந்து வழங்கும் மையம் காலை **7.00** மணி முதல் மாலை **5.00** மணி வரை செயல்படும்.

2. அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் இரண்டாம் தவணையாக 11.03.2018 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சொட்டு மருந்து வழங்கப்படும்.
3. தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி ஓரிரு நாட்களுக்கு முன் சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் சொட்டு மருந்து வழங்கப்பட வேண்டும்.
4. புதிதாக பிறந்த குழந்தைகளுக்கும் (New borns) முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.
5. சொட்டு மருந்து வழங்கப்படும் குழந்தைகளுக்கு இடது கை சுண்டு விரலில் மை வைக்கப்படும். இது விடுபட்ட குழந்தைகளைக் கண்டறிய உதவுகிறது.
6. முகாம் நாளன்று போலியோ சொட்டு மருந்து வழங்க தனியார் மருத்துவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.
7. இடம் பெயர்ந்து வாழும் தொழிலார்களின் குழந்தைகளுக்கும் முகாம் நாளான்று போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும்.

மேலும் கடந்த ஆண்டை போல இவ்வாண்டும் வயல்களில் குடியிருப்போர், சாலையோர குடியிருப்புகள், செங்கல் கால்வாய் குடியிருப்புகள், கல் குவாரிகள், பஸ் நிலையங்கள், திருவிழா கூட்டங்கள், இரயில் நிலையங்கள், சுங்கச்சாவடிகள் போன்ற பகுதிகளில் இருக்கும் குழந்தைகளுக்கு விடுபடாமல் சொட்டு மருந்து வழங்க நடமாடும் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம் முகாமின் மூலம் 5 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை கூட விடுபடாமல் அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஆகையால் பொது மக்கள் அனைவரும் தங்களது குழந்தைகளுக்கு 28.01.2018 நடைபெறும் முகாமில் தவறாமல் சொட்டு மருந்து போட்டு பயனடைய வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**